ஏ.கே.மூர்த்தி



மட்டுமே பொறுப்புகளைப் பிடித்துள்ளது. அடுத்து திருவண்ணாமலை மாவட்டத்தில் குருவின் ஆதரவாளராக இருந்த மாவட்டச் செயலாளர் மண்ணப்பனை தூக்கிவிட்டு அரசியலுக்குப் புதியதாய் வந்திருக்கும் கணேஷ்குமார் என்ற இளைஞருக்குப் பொறுப்பு வழக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமின்றி முக்கியமான நான்கு தொகுதிகளை இந்த கணேஷ்குமாரின் எல்லையாகத் தந்திருக்கிறார்கள். சிட்டிங் எம்.எல்.ஏ. எதிரொலிமணியன் உள்பட (கணேஷ் குமாரும்)பலர் வேல்முருகனின் தீவிர ஆதரவாளர்கள் மட்டுமல்ல.... எப்போதும் அவருடனேயே இருப்பவர்கள். இந்த மாவட்டத்திலும் வேல்முருகனின் அணியே முழுவதுமாக பா.ம.க.வைக் கைப்பற்றியுள்ளது. இதேபோல் வேலூர் மாவட்டத்திலும் வேல்முருகன் அணியே கட்சிப் பதவிகளைப் பிடித்துள்ளது. இந்த மாவட்டத்தில் முன்னாள் எம்.பி. சண்முகம் மட்டும் தனி ரூட்டில் போய்க் கொண்டிருக்கிறார். கடைசியாக ஜி.கே.மணியின் கோட்டை என்ற தர்மபுரியிலும் வேல்முருகனின் ஆதரவாளர்கள் கையே ஓங்கியிருக்கிருக்கிறது.

காடுவெட்டி குருவைப் பொறுத்தவரை எப்போதும் போல் வன்னியர் சங்கத்தோடு ஒன்றியிணைந்திருந்தாலும் அரியலூர், பெரம்பலூர் மாவட்ட நிர்வாகிகளை மட்டும் தக்க வைத்துக்கொண்டார். கடலூர் மாவட்டத்திலும் தன் கைத்தடிகளுக்குப் பதவி வாங்கிக் கொடுத்து பக்கத்தில் வைத்துக் கொண்டார். ஆனால் இந்த முறை எல்லாமே போய் விட்டது. அதனால் காடுவெட்டி குருவே கோபத்தில் இருக்கிறார்" என்றார் விவரமாக!

சிட்டிங் பா.ம.க. தலைவராக இருக்கும் ஜி.கே. மணியின் நிலைதான் அந்தோ பரிதாபம் என்று கூறிய சேலம் பா.ம.க. பிரமுகர் ஒருவர், "சொந்த மாவட்ட நிர்வாகிகளைக் கூட அவரால் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள முடியவில்லை. பக்கத்து தாய் வீடான சேலம் மாவட்டத்திலும் தமிழரசன் தனக்கென்று அங்கிருந்தவர்களை திரட்டிக் கொண்டதோடு நாமக்கல் மாவட்ட நிர்வாகிகளையும் தன் கைக்குள் வைத்துக் கொண்டு தனி ராஜாங்கம் நடத்திக் கொண்டிருக்கிறார். அவசியம் என்றால் வேல்முருகனோடு கூட்டணி வைத்துக் கொள்ளவும் தமிழரசன் தயங்க மாட்டார். இப்போதுள்ள நிலையில் சொந்த மாவட்டங்களிலேயே ஜி.கே.மணியுடன் கூட்டு சேர பா.ம.க. முக்கியஸ்தர்கள் யாரும் முன் வரவில்லை என்பதுதான் உண்மை நிலவரம். இப்போதைக்கு ஜி.கே. மணியிடம் இருப்பது திருச்சி, மதுரை போன்ற வெளி மாவட்ட நிர்வாகிகள் மட்டுமே" என்று ஆதங்கப்பட்டவர், "ஏ.கே. மூர்த்தி கூட தனி ரூட்டில் போய்க் கொண்டிருக்கிறார். காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை ஆகிய மூன்று மாவட்ட நிர்வாகிகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு 'எங்க ஏரியா உள்ள வராதே'ன்னு வேல்முருகனுக்கும், ஜி.கே. மணிக்கும் ரெட் கார்டு போட்டுவிட்டார் ஏ.கே.மூர்த்தி" என்கிறார் ஆவேசமாக!

வருகின்ற 30ஆம் தேதி டாக்டர் ராமதாஸ் மாநிலப் பொறுப்புகளை யார் யாருக்குத் தரப்போகிறார்? இல்லை நிர்வாகிகளை தேர்தல் மூலம் தேர்வு செய்வாரா? என்ற எதிர்பார்ப்பில் 'தைலாபுர' முடிவிற்காகக்காத்திருக்கிறார்கள் பா.ம.க. நிர்வாகிகள்.

*கட்சியின் அமைப்பு செயலாளர் வேல்முருகனுக்கு நீண்ட நாட்களாகத் தலைவராக வேண்டும் என்ற எண்ணம். அதற்கான சந்தர்ப்பம் இப்போது உருவாகி இருப்பதாக அவர் நினைக்கிறார்.*

இந்நிலையில் நாம் இது சம்பந்தமாக தைலாபுரத் தோட்டத்துக்கு நெருக்கமான சிலரிடம் பேசினோம். அவர்கள், "அவரவர் தனக்கென்று ஆதரவாளர்களைத் திரட்டி வருவது ஐயாவுக்குத் தெரியாமல் இல்லை. மேலும் சின்னய்யாவின் ராஜ்யசபாசீட்விவகாரத்தைதி.மு.க.விடம் பேசி வாங்கித் தர முடியவில்லை என்பதில் ஜி.கே. மணி மீது அதிருப்தியில்தான் எல்லோருமே உள்ளனர். ஏனென்றால் இந்த முறை வேல்முருகன் இறங்கிப் போய் வேலை செய்த அளவுக்கு ஜி.கே. மணி வேலை செய்யவில்லை என்ற ஆதங்கம் இருக்கிறது. அதனால் மாநில நிர்வாகிகள் பதவிக்கு தேர்தல் வைக்கலாம் என்று சொல்லிவிட்டால் ஐயா ஓ.கே. சொல்ல வாய்ப்பு உண்டு. இல்லையென்றால் 'ஜி.கே. மணியே தலைவராக இருக்கலாம் என்பது என் விருப்பம்' என்று சொல்லிவிட்டால் அதை எதிர்த்து யாரும் கருத்து சொல்லப் போவதில்லை. ஆனால் தன் கட்டளைகளைக் களத்தில் நின்று செய்து முடிக்கும் முக்கியத் தளபதிகளான குரு, ஜி.கே.மணி, வேல்முருகன், தமிழரசன், ஏ.கே.மூர்த்தி ஆகிய ஐந்து பேரும் தனி அணியாகப் பிரிந்திருப்பது ஐயாவுக்குப் பெரும் கவலையாக இருக்கிறது. அனேகமாக நடைபெறப் போகும் செயற்குழு மற்றும் பொதுக்குழுவில் இந்த ஐவர் குழுவின் கோஷ்டி பாலிடிக்ஸுக்கும் முடிவு கட்டுவார்" என்றனர் நம்பிக்கையோடு.

*